# K/SARASWATHY CENTRAL COLLEGE – PUSSELLAWA

## இடர்க்கால விடுமுறைக்கான மாணவர் செயலட்டை – 2021

**தரம்:10** **பாடம்:வரலாறு**

**அலகு:-இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி**

01.பின்வரும் சொற்களுக்கான பொருள்களை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1.தொட்டபோஜக | 5.போசனி அரசன் | 3.கமிக | 7.மபுறுமுகா |
| 4.குர்ஹபதி | 8.சக்விதி | 2.பருமக | 6.ரஜ(ராஜா) |

02.இடைவெளி நிரப்புக.

1.பருமக என்ற சொல்.......................எனும் சமஸ்கிருத சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

2.கி.மு 250 ஆம் ஆண்டை அண்மிய காலக் கல்வெட்டுகளில் இல்லத்தலைவர்கள் ................. என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

3.சுமணவின் குடும்பத்தைச் சேர்ந்த உலோக கைத்தொழில் மேற்கொண்டிருந்த இல்லத் தலைவனொருவன் பிக்குமார்களின் சேமநலன்கருதி கற்குகை ஒன்றை சுத்தம்செய்து தானமளித்தமை பற்றி .............................கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.கிராமத்து இல்லத்தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவரே கமிக என்று.................... தேரர்.....................எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

5.குளத்தொகுதியை உலர்வலய மக்கள் ........................எனும் பெயரால் குறிப்பிட்டுள்ளனர்.

6.போசனி அரசன் என்ற பிராந்திய நிர்வாகி பற்றி.................எனும் இடத்தில் உள்ள கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

7.பன்முகப்படுத்தப்பட்டு இருந்த அதிகாரம் ஒருமுகப்படுத்தப்படுவதே...............எனப்படும்.

8.அனுராதபுர இராசதானியை ஆண்ட முதல் மன்னன்........................ஆவான்.

9.புனித வெள்ளரசு மரம் நடப்படும் வைபவத்திற்கு தேவநம்பியதிஸ்ஸ மன்னனால்..................¸ .................எனும் பிரதேச தலைவர்கள் அழைக்கப்பட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.இலங்கையில் ................................தேரரால் பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

11.இலக்கிய மூலாதாரங்களின்படி இலங்கையை ஒன்றுப்படுத்திய முதல் மன்னன்...................... ஆவான்.

12.வசப மன்னன் காலத்தில் யாழ்ப்பாண பிரதேசத்தை நிர்வகிக்க ....................எனும் அமைச்சர் நியமிக்கப்பட்டதாக ........................பொற்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.புராதன காலத்தில் யாழ்ப்பாண குடாநாடு...............................என அழைக்கப்பட்டது.

14...........................என்ற பெயருடன் அறிமுகமாவது புராதன ஆசியா கண்டத்தை சேர்ந்த

அரசர்கள் கையாண்டு வந்த வழக்கமாகும்.

15.இந்நாட்டு வரலாற்றில் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கிய மன்னன் ……………………ஆவான்.

16.இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்………………………….. ஆவான்.

17.இந்நாட்டை ஆண்ட மேன்மையான மன்னனாக ……………………மன்னனைக் குறிப்பிடலாம்.

18.முதலாம் விஜயபாகு மன்னனின் இளமைப்பெயர்………………………ஆகும்.

19.வடமுனைத் தீவிலுள்ள பூரணத்துவமான நகரங்களில் ஒன்றாக ………………..விளங்குகின்றது.

20.முதன்முதலாக இந்நாட்டில் பாரிய குளங்களை அமைத்த மன்னன் ……………………ஆவான்.

03.அரசியல் மையப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டின் நிர்வாகிகள்

| அதிகாரிகள் | வழங்கப்பட்ட பெயர் |
|---|---|
| 1.மகாராஜா | ……………………………… |
| 2.தலைமை அமைச்சர் | ……………………………… |
| 3.தளபதிகள் | ……………………………… |
| 4.பொருளாளர் | ……………………………… |
| 5.நகரபரிபாலகர் | ……………………………… |
| 6.வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி | ……………………………… |
| 7.உணவுச்சாலை அதிகாரி | ……………………………… |
| 8.குதிரைப்பிரிவின் தலைவர் | ……………………………… |
| 9.யானைப்பிரிவின் தலைவர் | ……………………………… |
| 10.நாட்டியப்பிரிவின் தலைவர் | ……………………………… |
| 11.காசு அச்சிடும் பிரிவின் தலைவர் | ……………………………… |
| 12.வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர் | ……………………………… |
| 13.நகர கட்டட நிர்மாணி | ……………………………… |
| 14.அரச ஆவணங்களின் தலைவர் | ……………………………… |

04.பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1.அரசன் தோன்றுவதற்கு முன் நிர்வாக நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று நபர்களை குறிப்பிடுக.

2.கமிக,பருமக ஆகியோரின் பணிகளை எழுதுக.

3.குளத்தொகுதிகள் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் 2 தருக.

4.பண்டுகாபய மன்னனின் சேவைகள் 3 எழுதுக.

5.தேவநம்பிய திஸ்ஸ மன்னன் பௌத்த சமத்திற்கு ஆற்றிய சேவைகள் 3 எழுதுக.

6.துட்டகைமுனு மன்னனின் தளபதிகளாக இருந்த பருமகமார்கள் பெயர்களை எழுதுக.

7.அரசனின் கடமைகள்/பணிகள் மூன்று எழுதுக.

8.பின்வரும் பெயர்களால் குறிப்பிடப்பட்ட மன்னர்களின் பெயர்களை எழுதுக.

A.நரேஸ்வர B.அலகபய மகாராஜா C.மின்னேரித் தெய்வம் D.காலிங்க சக்கரவர்த்தி

9.புராதனகாலத்தில் அரசுரிமை கிட்டிய விதங்கள் இரண்டினை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

10.துட்டகைமுனு மன்னனின் சேவைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

11.முதலாம் விஜயபாகு மன்னனின் அரசியல் சேவைகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.